தமிழ் நாடு இளங்குழந்தைப் பராமரிப்புச் சேவைக்கான
கூட்டமைப்பின் செய்திமடல்

...ம்மா...

# தமிழ் நாடு ஃபோர்ஸஸ்

...ம்மா...

மழலை 18 பிப்ரவரி 2010 சொல் 1





***அன்புடையீர் வணக்கம்!***

***தமிழகத்தில் 50,433 ஆங்கன்வாடிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மார்ச் மாதத்திற்குள் மேலும் 4000 புதிய ஆங்கன்வாடிகள் திறக்க உள்ளதாக தமிழக அரசு முடிவு செய்துள்ளது. நர்சரி பள்ளிகள் காளான்கள் போல் பட்டி தொட்டிகள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. இதன் தாக்கத்தினால் ஆங்கன்வாடியில் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து உள்ளன. இதற்கு முக்கிய காரணம் ஆங்கன்வாடி தரமற்று இருப்பதாக பல ஆய்வுகள் உணர்த்துகின்றன. ஆங்கன்வாடியின் தரத்தை உயர்த்துவதற்கு பணியாளரின் ஊக்கமும் ஆர்வமும் மற்றும் உள்ளூர் சமுதாயத்தின் பங்கேற்பும் மிக முக்கிய காரணங்களாக விளங்குகிறது. இவற்றை செயல்படுத்துவதற்கு 'பசுமை ஆங்கன்வாடி' திட்டத்தை தமிழ்நாடு ஃபோர்ஸஸ் செயல்படுத்தி வருகிறது. இப்பசுமை ஆங்கன்வாடியில் (1) புகையில்லா ஆங்கன்வாடி (2) குழந்தை நேய கழிப்பறை (3) இயற்கை உரம் தயாரித்தல் (4) காய்கறித் தோட்டம் (5) சுற்று சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.***

***இவ்வம்சங்களை உறுப்பினர்கள் தங்கள் செயல்பாட்டில் இணைத்து இளங்குழந்தையின் உரிமை உறுதி செய்வீர்கள் என்று நம்புகிறோம்.***

***–ஆசிரியர் குழு***

## தடுப்பூசி திட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவுகள் குறித்து ஆய்வு

தடுப்பூசி திட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவுகள் குறித்து ஆய்வு நடத்த தமிழ்நாடு ஃபோர்ஸஸ், மக்கள் நல்வாழ்வு இயக்கத்துடன் இணைந்து ஆய்வு குறித்து சிறப்பு கூட்டம் ஒன்றினை திருச்சியில் 29-12-2009 (செவ்வாய்கிழமை) அன்று நடத்தியது. இக்கூட்டத்தில் 12 மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. குழந்தைகள் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற்ற பிறகு 2009 ஆகஸ்ட் 29ம் தேதி அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனால் இந்த அரசிதழில் எந்த தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படாததால் இது ஒரு வெற்று காகிதமாகவே உள்ளது. 6 முதல் 14 வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது.



மத்திய அரசு உடனடியாக வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து இச்சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2. மத்திய அரசு இச்சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. இத்திருத்தத்தில் ஆறு வயது

வரையிலுள்ள குழந்தைகளுக்கான முன்பருவக்கல்வியை நடைமுறைப்படுத்த சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும்.

3. புவி வெப்பமடைவதை தடுப்பதற்கு தமிழகத்திலுள்ள அனைத்து ஆங்கன்வாடிகளையும் பசுமை ஆங்கன்வாடிகளாக மாற்றுவது.

—oo0oo—

## தமிழ்நாடு அரசு பதிவுத்துறை

தமிழக அரசு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச்சட்டம் 2009 (தமிழ்நாடு சட்டம் 21/2009)ஐ இயற்றி அரசாணை எண் (பல்வகை) எண் 987 உள்துறை நாள் 24.11.2009ன்படி பல மதங்களைச் சார்ந்த இந்தியக் குடிமக்களின் 24.11.2009 முதல் தமிழகத்தில் நடைபெறும் அனைத்து திருமணங்களையும் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்து திருமணங்கள் சட்டம் 1955, இந்திய கிறிஸ்துவ திருமணச்சட்டம் 1872, சிறப்புத்திருமணச் சட்டம் 1954, முகமதியர்கள் ஷரியத் திருமணச்சட்டம் மற்றும் வேறு எந்த தனிப்பட்ட சட்டங்களின் கீழ் திருமணம் பதிவு செய்திருந்தாலும் இச்சட்டத்தின் பிரிவு 3ன் கீழும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

இச்சட்டத்தின்படி, பதிவுத்துறைத்தலைவர் அவர்கள் தலைமை திருமணப் பதிவாளராகவும், மாவட்ட பதிவாளர்கள் அனைவரும் மாவட்ட திருமணப் பதிவாளர்களாகவும் மற்றும் சார்பதிவாளர்கள் அனைவரும் திருமணப் பதிவாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்டாய திருமணப் பதிவிற்கான விவரங்கள் மற்றும் படிவங்கள் துறையின் இணையதளத்தில் (www.tnreginet.net) வெளியிடப்பட்டுள்ளன. இதனிலிருந்து விவரங்கள் அறிந்து படிவங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாடு திருமணங்கள் பதிவு விதிகள் 2009 அமலுக்கு வரும் நாளான 24.11.2009 முதல் நடைபெறும் அனைத்து திருமணங்களும், எந்த சாதி மதமாயிருப்பினும், மேற்குறிப்பிட்டவாறு உரிய நாளில் பதிவு செய்யாவிடில் அல்லது தவறான தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக அறியவரின் அல்லது விதி மீறல் இருப்பின் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவழக்கு தொடரப்பட்டு, நிரூபிக்கப்படின் அபராதம் விதிக்கப்படும்.

### தமிழக முதல்வருக்கு ஒரு லட்சம் கையெழுத்து இயக்கம்:–

- ✪ சமச்சீர் கல்வி திட்டத்தில் மழலையர் கல்வி சேர்க்கப்பட வேண்டும், அனைவருக்கும் தரமான கல்வியை உறுதி செய்ய வேண்டும்.
- ✪ செம்மையான மேற்பார்வைக்கு, மழலையர் கல்விக்கென்று தனி இயக்குனரகம் அமைக்கப்பட வேண்டும்.
- ✪ மழலையர் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- ✪ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் உள்ள ஆங்கன்வாடியின் தரத்தை உயர்த்த வேண்டும்.
- ✪ இத்திட்டத்தில் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளை கவனிப்பதற்கு ஏற்றார்ப் போல ஆங்கன்வாடிகளை சீர்படுத்தி, அதற்க்கென்று ஒரு பணியாளரை நியமிக்க வேண்டும்.
- ✪ மூன்று வயது நிரம்பிய குழந்தைகள் அனைவருக்கும் மழலையர் பிரிவுகள் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் தொடங்க வேண்டும்.
- ✪ மழலையர் பள்ளிகளின் செயல்பாடுகள், பாடத்திட்டம், உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறித்து விரிவான விதிமுறைகளை தயாரித்து செயல்படுத்த வேண்டும்.

சமச்சீர் கல்வி குறித்து ஒரு லட்சம் பேரிடம் கையெழுத்து இயக்கம் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது என்பது தாங்கள் அறிந்த ஒன்றே. தற்பொழுது 27,591 பேரிடம் பெற்ற கையெழுத்துக்கள் அடங்கிய பிரதிகள் தமிழக முதல்வரின் மேலான பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகளை பரிசிலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தமிழக முதல்வரை அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கையெழுத்துக்கள் அடங்கிய பிரதிகளை தமிழ்நாடு ஃபோர்ஸஸின் செயலகத்திற்கு அனுப்பி வைத்த உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு ஃபோர்ஸஸ் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் சமுதாய பங்கேற்பினை பலப்படுத்துதல்:-



தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மாவட்டவாரியாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் சமுதாய பங்கேற்பினை பலப்படுத்துதல் என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக கலந்தாய்வு கூட்டத்தினை மாவட்டவாரியாக நடத்தி வருகின்றது. மாவட்டங்களில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் / உறுப்பினர்கள் உதவியுடன் இக்கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சுய உதவிக்குழுக்களை சார்ந்தோர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், பிரதிநிதிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மாவட்ட திட்ட அலுவலர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆங்கன்வாடி பணியாளர்கள் போன்றவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து பரவலாக இக்கருத்தரங்கில் பங்கேற்றார்கள். இதுவரையில் இருபத்து நான்கு மாவட்டங்களில் இக்கலந்தாய்வு கூட்டமானது நடத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வெளியான ம்மா... செய்தி மடல்களில் பத்தொன்பது மாவட்டங்களில் நடத்தப்பட்டதின் விவரம் அளிக்கப்பட்டிருந்தது.

| வ.எண் | மாவட்டம் | தேதி | இடம் | தொண்டு நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 12.01.2010 | திருவள்ளூர் | ஐ. ஆர். சி. டி. எஸ். |
| 2. | அரியலூர் | 19.01.2010 | ஜெயங்கொண்டம் | ரோஸ் |
| 3. | கிருஷ்ணகிரி | 21.01.2010 | கிருஷ்ணகிரி | சேவை |
| 4. | கரூர் | 29.01.2010 | கரூர் | சிடார் |
| 5. | திருப்பூர் | 12.02.2010 | திருப்பூர் | சேவ் |

## இடம் பெயரும் குழந்தை தொழிலாளர்கள் பிரச்சனை குறித்து பட்டறை

தமிழக அரசு தொழிலாளர் நலத்துறை சென்னையில் 27 & 28 ஜனவரி 2010ல் இடம் பெயரும் குழந்தை தொழிலாளர்கள் பிரச்சனை குறித்து பட்டறை நடைபெற்றது.

ஒரிசா, ஆந்திரா, பீகார் போன்ற மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு இடம் பெயர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்கள் அரிசி ஆலைகள், செங்கல் சூளைகள், கல் குவாரிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

வெளி மாநிலங்களில் இருந்து இடம் பெயர்பவர்கள், மாநிலங்களுக்குள்ளேயே இடம் பெயர்பவர்கள் ஆகியோருக்கு முன்பணம் கொடுத்து அவர்களை பணியமர்த்துகின்றனர். இதனால் அவர்களின் குழந்தைகள் கட்டாயமாக இத்தொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது. குடும்பத்துடன் இடம் பெயருவதால் இளங்குழந்தைகள் அதிக அளவில் பாதிப்பு அடைகின்றனர். இப்பட்டறையில் வரைவு செயல் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வரைவு செயல்திட்டத்தில் இடம் பெயர்பவர்கள் பற்றிய தகவலைச் சேகரிப்பது, 5 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகள் ஆங்கன்வாடிகளைப் பயன்படுத்த அனுமதிப்பது, அவர்களுக்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது 15 வயதுக்கு கீழுள்ள குழந்தைகளுக்கு அடையாள அட்டை வழங்கி அவர்களுக்கு கல்வி அளிப்பது போன்றவை சொல்லப்பட்டுள்ளன.

## சர்வதேச மனித உரிமை தினம்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரில் சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு 'சிடோ' நிறுவனம் அருந்ததியர் குழந்தைகள் பாராளுமன்ற அமைச்சர்களின் பதவியேற்பும் எழுச்சிமிகு குழந்தைகள் மாநாட்டினையும்



10.01.2010 (ஞாயிற்று கிழமை) அன்று நடத்தியது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் சார்பாக அதன் அமைப்பாளர் கலந்துக் கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினார்.




### ஆங்கன்வாடியில் இடம்பெயரும் குழந்தைகளை சேர்த்துக் கொள்ள தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மனு வழங்கியது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்துறை முதன்மை செயலாளர் மற்றும் சிறப்பு ஆணையர் திருமிகு. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப. அவர்களுக்கு 15.02.2010 அன்று அளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள கோரிக்கையின் விவரம் வருமாறு.

தற்பொழுது தமிழகத்தில் வேறு பிற மாநிலங்களில் இருந்து பெரும்பாலான இடம்பெயரும் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தினை ஈட்டுவதற்காக நாளுக்கு நாள் வந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் பெருமளவில் தாங்கள் பணிபுரிகின்ற பகுதிகளிலோ அல்லது அதன் அருகாமையிலோ தங்கி விடுகின்றனர். தாங்கள் பணிபுரிகின்ற நேரத்தில் தங்களுடைய குழந்தைகளை அருகாமையில் உள்ள ஆங்கன்வாடிகளில் சேர்க்க விரும்புகின்றனர். ஆனால் பெரும்பாலான ஆங்கன்வாடி மையங்களில் இடம்பெயரும் குழந்தைகளை சேர்ப்பதில்லை. இதுகுறித்து தாங்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அளவில் உள்ள அனைத்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களை கேட்டுக் கொண்டால், அது அக்குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் மேலும் அவர்களுடைய கல்வியினை தொடரவும் ஒரு வாய்ப்பாக அமையும் இது குறித்து ஆணையர் பரிசிலனை செய்ய வேண்டும் என அக்கோரிக்கை மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் 2.5 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள்

சென்னை, ஜன 28: தமிழகத்தில் 2.5 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பதாக மாநில சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை முதன்மைச் செயலர் வி. கே. சுப்புராஜ் தெரிவித்தார். தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் சாந்தா சின்கா வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அங்கிருந்த சுப்புராஜ் இது குறித்து கூறியது:

தமிழகத்தில் எச். ஐ. வி. மற்றும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2005-ல் 1.25 சதவீதமாக இருந்தது. தமிழக அரசின் நடவடிக்கைகள் காரணமாக அது இப்போது 0.25 சதவீதமாக குறைந்துள்ளது.

இந்தியா முழுவதும் 25 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர். தமிழகத்தில் 2.5 லட்சம் அதாவது 10 சதவீத எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர். 8 ஆயிரம் குழந்தைகள் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பாதுகாக்க நாட்டிலேயே முதன்முறையாக ரூ.5 கோடியில் நிதியம் ஒன்றை தமிழக அரசு உருவாக்கி உள்ளது. அதன் மூலம் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் தொகையை ரூ. 25 கோடியாக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்கிறார் சுப்புராஜ்.

*ஆதாரம்: தினமணி வெள்ளிக்கிழமை 29 ஜனவரி 2010 பக்கம் -7*

# திருச்சி மண்டல சம கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் திட்டமிடல் கூட்டம்

11.02.2010, வியாழக்கிழமை அன்று திருச்சி மண்டல சமகல்வி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் திட்டமிடல் கூட்டம், திருச்சி ஓட்டல் கல்பனாவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஃபோர்ஸஸ் அமைப்பாளர் முனைவர் க. சண்முகவேலாயுதம் அவர்கள், இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை சட்டம் - 2009 பற்றியும் தமிழகத்தில் சமச்சீர் கல்வியின் தற்போதைய நிலை குறித்தும் விளக்கினார்.

பங்கேற்பாளர்கள் அனைவரும் சமச்சீர் கல்வி மற்றும் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை சட்டம் பற்றி விரிவாக விவாதித்தனர். பின் இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. திருச்சி மண்டலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, கரூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர் மற்றும் நாகை) சம கல்வி உரிமைக்கான பிரச்சார இயக்கம் நடத்தி மக்கள் ஆதரவை திரட்டுவது எனவும் அதன் மூலம் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தி அரசை வலியுறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
2. திருச்சி மண்டல அளவில் இப்பிரச்சாரத்தை ஒருங்கிணைப்பதற்கான கீழ்க்கண்ட நபர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது:-
   திரு. V. மகேஷ்வரன் - அமைப்புசாரா தொழிலாளர் கூட்டமைப்பு, திருச்சி
   வழக்குரைஞர் திரு. தமிழகன் - காவிரி அறக்கட்டளை, திருச்சி.
   திரு. ஜான் K. திருநாவுக்கரசு - ரோஸ் டிரஸ்டு, அரியலூர் மாவட்டம்.
   திரு. K. கோவிந்தன் - லீட் டிரஸ்ட், திருச்சி
   திரு. G. சௌந்தர்ராஜன் - நம்பிக்கை பவுண்டேசன், திருவாரூர்.
   திரு. K. சேவியர் பீட்டர் - காவிரி அறக்கட்டளை, லால்குடி.
   திரு. M.P.K. .துரைராஜ் - ரோசெட், முசிறி, திருச்சி.
   வழக்குரைஞர் திரு. A. கமருதின் - மக்கள் மையம்.
   திரு. K. மணிமாறன் M.S.W. - UDC கல்லூரி, திருச்சி.
   ப. மருதாணி, M.S.W. ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சி.
   திரு. M. ஹெல்டின் ரஜனி - திருச்சி மாவட்ட உபயோகிப்பாளர் இயக்கம், திருச்சி.
   திரு. K. விஸ்வலிங்கம் - டிரஸ்ட் ஃபார் ஹோப், திருச்சி.
   திரு. R. K. ராஜேந்திரன் - PSSS. பெரம்பலூர்.
   திரு. இப்ராஹிம் ஷா - OSee பவுண்டேசன், திருச்சி.
   திரு. ஆண்டனி ஸ்டீபன் - ரெயின்போ பவுண்டேசன், திருச்சி
3. மாவட்டத்திற்கான பொறுப்பாளர்களாக கீழ்க்கண்டவர்கள் இருப்பார்கள் எனத்தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| திருச்சி மாவட்டம் | - | திரு. V. மகேஷ்வரன் |
| பெரம்பலூர் மாவட்டம் | - | வழக்குரைஞர் திரு. தமிழகன் |
| அரியலூர் மாவட்டம் | - | திரு. ஜான் K. திருநாவுக்கரசு |
| புதுக்கோட்டை மாவட்டம் | - | திரு. R. சுப்ரமணியன், சக்ஸஸ் டிரஸ்ட் |
| கரூர் மாவட்டம் | - | திரு. பாலசுந்தரம், ஸ்ணேர் அறக்கட்டளை. |
| தஞ்சை மாவட்டம் | - | திரு. பாத்திமாராஜ் |
| திருவாரூர் மாவட்டம் | - | திரு. G. சௌந்தர்ராஜன் |
| நாகை மாவட்டம் | - | பின்னர் தீர்மானிக்கப்படும் |

4. இம்மாத (பிப்ரவரி மாதம்) இறுதிக்குள் அனைத்து மாவட்டங்களிலும் பொறுப்பாளர்கள் மூலம் அங்குள்ள அமைப்புகளை ஒருங்கிணைத்து கூட்டங்கள் நடத்துவது எனவும் அக்கூட்டங்களில் பிரச்சாரங்கள் மற்றும் போராட்ட தீர்மானங்களை முடிவு செய்வது எனத்தீர்மானிக்கப்பட்டது.

# ஆங்கன்வாடி மையத்தில் சாதிய பாகுபாடு

இலந்தைகுலம் என்ற குக்கிராமம் பாப்பாகுடி என்ற கிராம பஞ்சாயத்தைச் சேர்ந்தது. இக்கிராமம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம் வட்டத்தை சார்ந்தது. இந்த கிராமத்தில் பெரும்பாலான குடும்பங்கள் நாடார் சாதியை சேர்ந்தவர்கள். 20 அருந்ததியர் குடும்பங்களும் வசித்து வருகின்றனர்.

இலந்தைகுலத்தில் 6 ஆங்கன்வாடிகள் உள்ளன. இந்த ஆங்கன்வாடிகள் தமிழக அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுகின்றது. இந்த ஆங்கன்வாடிகள் பாப்பாகுடி ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதில் உள்ள ஒரு ஆங்கன்வாடியில் திருமதி பிரேமாகுமாரி பணியாளராகவும், திருமதி பாப்பாத்தி உதவியாளராகவும் பணியாற்றி வருகின்றனர்.

இங்கு 23 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர். இதில் 4 குழந்தைகளைத் தவிர மற்ற அனைவரும் நாடார் சாதியை சேர்ந்தவர்கள்.

அருந்ததியர் குடும்பத்திலிருந்து நான்கு குழந்தைகள் மட்டுமே தகுதியானவர்கள். அதில் 2 பெண், 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இந்த நான்கு குழந்தைகளில் கதர்கரிச்சாபானி, மாடதி தம்பதியரின் குழந்தை செல்வி (5 வயது) மற்றும் கருப்பசாமி வள்ளியம்மாள் தம்பதியரின் குழந்தை நித்தியா (4 வயது) தினமும் ஆங்கன்வாடியில் பயன்பெறுகின்றனர்.

இந்த ஆங்கன்வாடியில் சாதி பாகுபாடுகள் மிகவும் தெளிவாக தெரிகின்றது. ஆங்கன்வாடி உதவியாளர் நாடார் குழந்தைகளை மட்டுமே கவனித்துக் கொள்வார். அருந்ததியர் குழந்தைகளை கவனிக்க மாட்டார். அருந்ததியர் குழந்தைகளை கடுஞ்சொல் பேசி காயப்படுத்துவார். இக்குழந்தைகளை சக்கிலிச்சி பிள்ளைகள் என்று கடுமையாக சொல்லும் சொல்தான் 'சக்கிலியர்'. அருந்ததியர் குழந்தைகளுக்கு அரைமுட்டை மட்டுமே கொடுப்பார்.

ஆங்கன்வாடி உதவியாளர் முட்டை கொடுப்பதில் கூட பாகுபாடு காட்டுகின்றனர். இந்த சம்பவங்கள் குழந்தைகளை மனரீதியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைப்பராமரிப்பு சேவை ஓரங்கட்டப்பட்ட குழந்தைகளுக்கு உரிமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாங்கன்வாடி மையத்தில் இந்த உரிமை மறுக்கப்படுகிறது.

இப்பிரச்சனையை குழந்தை உரிமையும் நீங்களும் என்ற அமைப்பு ஏற்பாடு செய்த பொது விசாரணையில் (3.12.2009) அன்று நடுவர்கள் முன் வைக்கப்பட்டது.

---

## உணவு உரிமைக்கான பிரச்சாரம்

உணவு உரிமைக்கான பிரச்சாரம் ஜனவரி 25ஆம் தேதியன்று பாண்டிச்சேரியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் கலந்துக் கொண்டார்.

---

## கல்வி மற்றும் ஒழுக்கம் குறித்து ஒரு கலந்துரையாடல்

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கம் மேம்பாடு குறித்து ஒரு கலந்துரையாடல் கூட்டம் 01/02/2010 திங்கள் அன்று 3.00 மணி முதல் 4.30 மணிவரை நடைபெற்றது. தமிழ்நாடு ஃபோர்ஸஸின் சார்பாக அதன் அமைப்பாளர் கலந்துக் கொண்டார். இக்கூட்டத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துக் கொண்டனர்.

---

## இலவச கட்டாய கல்வி சட்டம்

பட்ஜெட் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்டு குடியரசு தலைவர் பிரதிபா பாட்டில் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெறுவதை அடிப்படை உரிமையாக்க வகை செய்யும் குழந்தைகள் இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டம் அறிக்கை செய்யப்பட்டு விட்டதாகவும் அது ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வருவதாக தெரிவித்தார்.

# அறுபது ஆண்டுகால இந்திய திட்ட வரலாற்றில் முதன்முறையாக திட்ட வல்லுநர்கள் மக்களின் மதிப்பீட்டினை பெறுதல்.

11வது ஐந்தாண்டு திட்டத்தின் இடைக்கால மக்கள் மதிப்பீடு குறித்த தேசிய அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் பிப்ரவரி 4, 5 ஆகிய நாட்களில் தில்லியில் நடைபெற்றது. முதல் நாளான பிப்ரவரி 4ல் துவக்க நிகழ்ச்சியினை அடுத்து முதல் அமர்வானது சுகாதார சேவைகள் குறித்து நடைபெற்றது. இதற்கு தேசிய திட்ட ஆணைய உறுப்பினர் திருமிகு. சைய்தா ஹமீது தலைமை தாங்கினார். சுகாதாரத் துறையில் பொது மற்றும் தனியார் அமைப்புகளின் கூட்டானது தனியார் அமைப்புகளின் வளர்ச்சியினை மட்டுமே காட்டுகிறது. மேலும் வசதியுள்ளவர்களால் மட்டுமே இச்சுகாதார சேவைகளை பெற முடிகின்றது போன்ற கருத்துக்கள் வெளியானது.




இரண்டாவது அமர்வில் வேலை வாய்ப்பு வாழ்வாதாரம் மற்றும் மற்றும் தண்ணீர் குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது. இதில் திருமிகு. இந்திரா குரானா Water Aid India அவர்கள் தனது உரையில் நீர்வளத்தில் தற்போதைய வளர்ச்சி பணிகளின் தாக்கம் குறித்தும், தலித் இன மக்கள் மற்றும் பாதிப்புற்குள்ளாகும் மக்களின் சமூக பாதுகாப்பு குறித்தும் திட்டம் வரையப்படும் போது யோசிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தேசிய திட்ட ஆணைய உறுப்பினர் திரு. மிஹிர் ஷா கூறுகையில் சமூகம் சார்ந்த அமைப்புகளின் பொறுப்பின் தேவையினையும் வலியுறுத்தினார்.

முதல் நாள் கடைசி அமர்வில் தென்மண்டலம், கிழக்கு மண்டல, மேற்கு மண்டல மற்றும் வடகிழக்கு மண்டலங்களை சார்ந்த ஐந்து மண்டலங்களின் பிரதிநிதிகள் தங்கள் மண்டலங்களில் நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டங்களில் வெளியான பரிந்துரைகளை வெளியிட்டு அதனை வாசித்தும் காட்டினார்கள்.

கலந்தாய்வு கூட்டத்தின் இரண்டாம் நாளில் முதல் இரண்டு அமர்விலும் உள்ளார்ந்த வளர்ச்சியில், திட்ட ஆணையத்தின் வழிகாட்டும் விதிமுறைகளில் நீக்கப்பட வேண்டியவை குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த அமர்வில் திட்ட வரைதல் மற்றும் திட்டத்தினை செயல்படுத்துதலில் திட்ட பயனாளிகளை சென்றடைவதில் உள்ள தடைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மூன்றாவது அமர்வில் நல்ல ஆட்சி நிர்வாகம் மற்றும் நகர்புற ஏழ்மை குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த அமர்விற்கு திரு. அருண் மெய்ரா தலைமை தாங்கினார். சமூகத்தில் பின்தங்கிய மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு நல் ஆட்சி நிர்வாகத்தில் பொருளாதார நிதி கிடைக்கவில்லை என்றும் நகர்புற ஏழ்மை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் விவாதிக்கப்பட்டது.

நான்காவது அமர்வானது இயற்கை வளங்கள் மற்றும் விவசாயம் குறித்தும் இருந்தது. இதில் விவசாய உற்பத்தி செய்யக்கூடிய வளங்களான நிலம் அதன் மேல் மக்களுக்கு இருக்ககூடிய உரிமையினை திட்ட




ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்றும், மேலும் இதில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து அமர்வுகளும் இரண்டே நாளில் முடிவுற்றது. இதில் 29 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து வந்திருந்த பங்கேற்பாளர்களிடமிருந்து பல்வேறுபட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டது. தேசிய திட்ட ஆணையத்திலிருந்து வந்திருந்த ஐந்து உறுப்பினர்கள் மக்கள் 11வது ஐந்தாண்டு திட்டத்தினை பற்றி கூறுவதை கவனித்து அது 12வது ஐந்தாண்டு திட்டத்தினை தீட்டுவதற்கு வழிகோலாக அமைவதற்கும் ஓர் வாய்ப்பாக அமைந்தது.

இக்கலந்தாய்வின் இறுதி அமர்வானது தேசிய திட்ட ஆணையத்தின் துணைத்தலைவர் திரு. மாண்டேக் சிங் அலுவாலியா மற்றும் வாடா நா தொடோ அபியன் ஒருங்கிணைப்பு குழுவின் அமைப்பாளர் திரு. அமிதாப் பெஹர் தலைமையில் நடைபெற்றது. பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் திட்ட ஆணையத்தின் துணைத்தலைவரின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டது. அவர் வாடா நா தொடோ அபியன் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் இந்த கலந்தாய்வு கூட்டத்தினை நடத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளை வெகுவாக பாராட்டினார். மேலும் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனத்தில் கொள்வதாகவும், ஒருங்கிணைப்பாளர்கள் திட்டம் வரையும் பொழுது பங்கேற்க வேண்டும் என்று அறிவிக்கை விடுத்தார். இறுதியாக வாடா நா தொடோ அபியன் ஒருங்கிணைப்பு குழுவின் அமைப்பாளர் திரு. அமிதாப் பெஹர் அனைவருக்கும் தனது அமைப்பின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.



பெறுநர்

புத்தக அஞ்சல்

அனுப்புநர் :
**தமிழ் நாடு போர்ஸஸ்**
C/o இளங் குழந்தையின் உரிமை பேணும் நிறுவனம்
எண்: 3, அய்யாவு தெரு,
அய்யாவு குடியிருப்பு,
சென்னை - 600 029. **Ph.: 2363 1126**
**E-mail : tnforces@yahoo.com**
**web page: www.tnforces.com**

தனிச்சுற்றுக்கு மட்டும்